தலைப்பு 250 – அரச கணக்குகள் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 250 – அரச கணக்குகள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை அரச கணக்குகள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	05 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 03 மூலதன செலவின விடயங்களுக்குமாக மிகை ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 12,490,183 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது ஒவ்வொரு செலவின விடயத்தினதும் தேறிய நிதி ஏற்பாட்டில் 14 சதவீதம்	மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளங்களுக்காக உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்துவதை வரையறுத்தல், அரச நிறுவனங்களுக்கிடையிலான கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் இணையவழி ஊடாக நடாத்தியமையினால் பிரயாணச் செலவினங்கள் வரையறுக்கப்பட் டமை, அரச செலவின முகாமைத்துவம் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட 2024 சனவரி 10 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினங்களை கட்டுப்படுத்துதல், அத்தியவசிய பராமரிப்பு நடவடிக்கைகளை	நிதிப் பிரமாணம் 50 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு இயலுமான வரை சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

	முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சினை கொண்டிருந்தது.	மாத்திரம் மேற்கொள்ளல், அநேகமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இணையவழி ஊடாக மேற்கொள்ளல், இடைக்கால எல்லைக்காக அரசாங்க நிறுவனங்களுக்கு பொருத்தமான பிரகாரம் மாற்றப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்காக குறித்துரைத்த அங்கீகாரம் கிடைக்காமையின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமை போன்றவை இந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்படுவதற்கு காரணமாக இருந்தது.	
(ஆ)	மீளாய்வாண்டிற்கான ஆரம்ப செலவின மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீட்டை ஒப்பீடு செய்யும் போது 17 செலவின விடயங்களுக்குரியாக 58 சதவீதம் குறைவடைந்தது முதல் 211 சதவீதம் வரை அதிகரித்த வீச்சில் வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தது.	2024 வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் பிரகாரம் மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 10,000 இனால் அதிகரித்தமை மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் விஷேட படி ரூபா 25,000 ஆக்கப்பட்டமை, எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் மாநாடுகள் அதிகரித்தமை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது காகிதாதிகளின் விலை வீழ்ச்சியடைந்தமை மற்றும் காகிதாதிகளின் பயன்பாட்டைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் குறைவடைந்தமை, அத்தியாவசிய பராமரிப்புக்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டமையினால் எதிர்பார்க்கப்பட்ட செலவினம் குறைவடைந்தமை, 01/2024 தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் குறைவடைந்தமை, வற் வரி அதிகரித்தமை, ஆதனக் கடன் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இடமாற்றலாகிச் சென்றமையினால் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் ஏற்படாமல், துணைப்பாகங்களின் விலைகள் அதிகரித்தமையினால் பழுதுபார்த்தல் செலவினம் குறைவடைந்தமை, அத்தியாவசிய கணனி மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு வேண்டி ஏற்பட்டிருந்தமை, இடைக்கால எல்லைக்கான அரச நிறுவனங்களுக்கு பொருத்தமான பிரகாரம் மாற்றப்பட்ட கணக்கீட்டு நியமத்திற்காக குறித்துரைத்த அங்கீகாரம் கிடைக்காமையின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமை போன்ற காரணத்தினால் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது.	நிதிப் பிரமாணம் 50 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு இயலுமான வரை சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ)	போதியளவான பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்காமையின் காரணமாக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் 04 செலவின விடயங்களுக்கான நிதி ஏற்பாடு அதிகரிக்கப்பட் டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது முழுமையாக பயன்படுத்தப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.	உத்தியோகத்தரால் விண்ணப்பிக்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக நிதி ஏற்பாடு கோரப்பட்ட போதும் உரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அந்த உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படாமை, லெப்டொப் கணனி மற்றும் ஏனைய அத்தியாவசிய அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட மேலதிக நிதி ஏற்பாடுகளுக் கிடையே குறித்துரைத்த பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்டு கட்டளை கையளிக்கப்பட்ட பின்னர் சில விடயங்கள் உரிய ஆண்டில் வழங்குவதற்கு முடியாதிருந்ததாக உரிய நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டிருந்தமை, அதற்குரிய மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு போதியளவு சேமிக்கப்பட்டமை, அறை இலக்கம் 110 இற்காக கொள்வனவு செய்யப்பட்ட மடி கணனிக்காக உரிய நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் எமது திணைக்கள விலையினை விட குறைவடைந்தமை போன்றவை இந்த சேமிப்பிற்கான காரணமாக இருந்தது.	மேற்படி
(ஈ)	குறை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டதன் காரணமாக ஆரம்ப மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு 100 சதவீதத்தை விஞ்சி நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்த 02 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.	அவசரமாக அத்தியவசிய அச்சிடல் இயந்திரத்தைப் பழுதுபார்த்தல், 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மதிப்பீடு செய்யப்பட்ட விலையினை விட 2024 ஆம் ஆண்டு வரையில் சேவர் இற்காக கூறுவிலை உயர்வடைந்து சென்றமையும் கணனிக் கூடத்திற்காக தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்தல் அவசியமாக எழுந்தமை போன்றவை இந்த மாற்றங்களுக்கான காரணமாக இருந்தது.	மேற்படி

3.2 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்து வைத்தல்

3.2.1 நானாவித முற்பணக் கணக்கு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருடங்களை விஞ்சிய நானாவித முற்பணங்களின் நிலுவை மீதி ரூபா 123,685,062 ஆக இருந்ததுடன் அது மொத்த நிலுவையில் 94 சதவீதம் ஆகும். மேலும் பொலன்னறுவை, அனுராதபுரம், அம்பாறை, மாத்தளை	நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக உரிய பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனை மற்றும் உதவியை வழங்கி தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை செய்வதன் மூலம்	பின்தொடர் நடவடிக்கைகளை முறையாக மேற் கொண்டு நிலுவை மீதியைத் தீர்த்து வைப்பதற்காக போதியளவான

	போன்ற மாவட்ட செயலகங்களில் இருந்து கமநல சேவை திணைக்களம் மற்றும் பணிப்பாளர், தேசிய பொது வைத்தியசாலை, கொழும்பு போன்ற நிறுவனங்களில் இருந்து 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்படாத நிலுவை மீதிகள் காணப்பட்டது. எனினும் இந்த நிலுவை முற்பணப் பெறுமதி மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	கொழும்பு பல் நிறுவனத்தில் 2002 திசம்பர் 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட சம்பளக் கொள்ளை தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு 2022 யூலை 26 ஆம் திகதி C 3 எழுத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாக மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் சுகாதார அமைச்சிற்கு அறிவித்திருந்ததுடன் சுகாதார அமைச்சின் மூலம் இந்தத் தொகையைப் பதிவழிப்பதற்காக பொது 285 படிவம் சமர்ப்பித்து 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும் உரிய தொகையை பதிவழிப்பதற்கோ அல்லது நியாயமான நடவடிக்கை எடுப்பதற்கோ திணைக்களம் 2025 மே 30 ஆம் திகதி வரையிலும் தவறியிருந்தது.	கொழும்பு பல் நிறுவனத்தில் நிதி கொள்ளையடித்தலுக்குரிய தீர்த்துவைக்கப்படாது காணப்படுகின்ற தொகை 22 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் இது வரை அறவிடுவதற்கு முடியாதிருந்தமை யால் அந்தத் தொகையினைப் பதிவழிப்பதற்கு உரிய விண்ணப்பம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. பதிவழிப்பதற்கான அங்கீகாரம் கிடைத்த பின்னர் 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி நட்டத்தைப் பதிவழித்தல் முறையான பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக திறைசேரி பிரதிச் செயலாளரின் தலைமையில் 2025 மார்ச் 03 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.	மேற்படி
(இ)	அனுராதபுர மாவட்ட செயலகத்தின் கீழ் நிலுவையாக இருந்த முற்பணத் தொகையான ரூபா 31,097,247 தொகையில் உள்ளடங்கியிருந்த எப்பாவல பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குரிய ரூபா 5,100,300 நிலுவைக் கடன் முற்பணம் சலுவை வழங்கும் திட்டத்தின் பிரகாரம் செலுத்துவதற்கு 2023 ஆகஸ்ட் 21 ஆம் திகதி இணங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த சங்கத்தினால் இணங்கப்பட்ட தவணைப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற் குரிய ரூபா 500,000 தொகை 2025 மே 30 ஆந் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது.	எப்பாவல பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் இணங்கிய பிரகாரம் பணம் தீர்த்துவைக்கப்பட்டிருந்ததா என பின்தொடர் நடவடிக்கை எடுக்குமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டதுடன் திறைசேரி பிரதிச் செயலாளரின் தலைமையில் 2025 மார்ச் 03 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.	மேற்படி

(ஈ)	மாத்ததளை மாவட்ட செயலகத்தில் லக்கள பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குரிய 2021 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 643,350 ஆன நிலுவை முற்பணத்தை செலுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த சலுவை திட்டத்தின் பிரகாரம் வருடாந்தம் ரூபா 120,000 தவணைப் பணம் செலுத்துவதற்கு இணங்கியிருந்த போதிலும் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 100,000, ரூபா 110,000, ரூபா 100,000 வீதம் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 213,358 நிலுவையாக காணப்பட்டது.	2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் வ/ப லக்கல பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் செலுத்தப்படாதிருந்த தவணைப் பணத்தை தாமதமின்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இணங்கப்பட்ட பிரகாரம் தவணைப் பணம் தீர்த்து வைக்கப்பட்டதா என பின்தொடர் நடவடிக்கை செய்யுமாறும் மாத்தளை மாவட்ட செயலகத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.	மேற்படி
(உ)	அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் 2019 மார்ச் 02 ஆந் திகதியில் இடம்பெற்ற காசுக் களவின் காரணமாக ஏற்பட்டிருந்த நட்டத்தை தீர்த்துவைப்பதற்காக நிதிப் பிரமாணம் 106 இன் பிரகாரம் விடுவிக்கப்பட் டிருந்த ரூபா 6,321,785 முற்பணத் தொகை இதுவரையில் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2025 மே 30 ஆந் திகதி வரையிலும் தீர்த்துவைத்திருக் கப்பட்டிருக்கவில்லை.	சுகாதார அமைச்சினால் மேற்கொள் ளப்பட்ட விசாரணை மற்றும் வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திறைசேரி பிரதிச் செயலாளரின் தலைமையில் 2025 மார்ச் 03 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.	மேற்படி
(ஊ)	அம்பலாங்கொட பிரதேச செயலகத்தில் 2023 செப்டெம்பர் 26 ஆம் திகதி இடம் பெற்ற காசுக் களவின் காரணமாக ஏற்பட்டிருந்த நட்டத்தை தீர்த்து வைப்பதற்கு நிதிப்பிரமாணம் 106 இன் பிரகாரம் விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 1,210,803 முற்பணத் தொகை 2025 மே 30 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைத்திருக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளை விரைவாக பூர்த்தி செய்து பொறுப்புவாய்ந்த வர்களிடமிருந்து உரிய பணத்தை அறவிட்டு முற்பணக் கணக்கில் செலவுவைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	மேற்படி

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்பெறாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	திறைசேரி செயற்பாட்டு நவடிக்கைகளை தானியங்கச் செய்வதற்காக இணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS) அறிமுகப்படுத்துதல் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டதுடன் அதற்காக ஒட்டு மொத்த முதலீட்டின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 7,920 மில்லியனுக்கு சமமான அ.டொலர் 60 மில்லியன் ஆக காணப்பட்டது. இதற்காக 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 5,647 மில்லியன் செலவிடப்பட் டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம் மற்றும் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 957 மில்லியன் செலவினமும் செய்யப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 6,605 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அண்ணளவாக 14 வருடங்கள் கடந்திருந்த போதும் இந்த செயற் திட்டத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கு	முறைமையில் court case management செயற்பாடுகள் அமைச்சின் சட்ட நடவடிக்கை சட்ட அலுவல்கள் திணைக்களத் திற்காக மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் முறைமையின் அரச நிதி முகாமைத்துவத் திற்குரிய பிரதான மூலங்களுக்கு உரித்தல்லாத வரையறுக்கப்பட்ட செயற்பாடாகும். இந்த செயற்பாடுகள் மேற் கூறப்பட்ட திணைக்களத்தின் மூலம் பயன்பாட்டை ஆரம்பித்த போதிலும் அந்த செயற்பாடுகளில் உள்ள குறைந்த முக்கியத்துவத்தின் காரணமாக தற்போது தொடர்ச்சியாக அமுல்படுத் தப்படவில்லை. ITMIS போன்ற கணிசமான பரப்பளவையுடைய செயற்பாடுகள் ஒரே தடவையில் அரசாங்க நிறுவனம் யாவற்றிலும் ஸ்தாபித்தல் நடைமுறையில் மேற்கொள்ள முடியாதிருந்தது. அதன் பிரகாரம் முறைமையில் வரவு செலவுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய செயற்பாடுகளில் ஆரம்பமாக பரவலாக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு வரையில் பூர்த்தி செய்யப் பட்டிருந்ததுடன் முறைமையின் செலவினத்தை முகாமைத்து வம் செய்வதற்குரிய செயற்பாடுகளில் பரவலாக்கல் இரண்டாவதாக ஆரம்பிக்கப் பட்டிருந்தது. எனினும் கொவிட் (Covid) தொற்று நோய் நிலைமை, சமூக மற்றும் நிதி நெருக்கடியின் காரணமாக காணப்பட்ட நிச்சயமற்ற தன்மை, மின்சாரம் மற்றும் போக்குவரத்து சேவை வீழ்ச்சியடைந்தமையினால் முறைமையின் பரவலாக்கல் நடவடிக்கைகளுக்காக கணிசமான இடையூறுகள் ஏற்பட்டிருந்தமை, நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட பயனர்களின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கூறப்பட்ட விடயங்களினால் அமுல்படுத்த முடியாதிருந்தது. மேலும் முறைமை தொடர்பாக உள்ளக ரீதியிலும் வெளியக ரீதியிலும் விஷேட நிபுணர்கள் / குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் காரணமாக முறைமையின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு சேவை உடன்படிக்கைகள் நாளது	தற்போதும் பின்னடைவில் காணப்பட்டமையால் முறைமையை விரைவாக முழுமையாக அபிவிருத்தி செய்து அமுல்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப பிரதான செயற்பாடுகள் 13 துறைகளில் முழுமையாக அபிவிருத்தி செய்து அமுல்படும் நிலைக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை.	வரையாக்குவதில் தாமதமடைவதற்கு ஏற்பட்டிருந்தமையினால் முறைமையின் பரவலாக்களை பூர்த்தி செய்வதற்கு தேவையான மேலதிக பயனர் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் 2025 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் வரை தாமதம் அடைந்திருந்தது.	
(ஆ)	மேலும் இந்த ITMIS முறைமை ஆரம்பத்திலிருந்து அதில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட, சம்பள முகாமைத்துவ செயற்பாடுகள் பிரிவை ஸ்தாபித்து அமுல்படுத்தாமல் 2016 ஆம் ஆண்டின் போது e-Payroll என்ற பெயருடைய இன்னுமொரு சம்பளம் முகாமைத்துவம் முறைமை ஒன்று நிதியமைச்சிக்கு மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதற்காக 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 6.7 மில்லியன் செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	2016 ஆம் ஆண்டு வரையிலும் தற்போதும் சம்பள முகாமைத்துவத்திற்காக அரச துறைகளில் பயன்படுத்தப்படுகின்ற காலாவதியான மென்பொருளுக்கு பதிலாக புதிய மென்பொருள் ஒன்றை மொத்த அரச துறைகளுக்காகவும் அமுல்படுத்துவதற்கான தேவை நிதி அமைச்சினால் இனங்காணப்பட்டிருந்தது. ITMIS முறைமையில் அபிவிருத்தி செய்யப்பட்ட சம்பள முகாமைத்துவ செயற்பாடுகள் முழுமையாக அரச துறைகளுக்காகவும் பரவலாக்குவதற்கு தொழில்நுட்ப ரீதியில் பொருத்தமான செயற்பாடுகள் காணப்படவில்லை. மேலும் மேலதிக பயனர் அனுமதிப் பத்திரங்களுக்காக கணிசமான தொகையொன்றை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தமையினால் அவ்வாறு செய்தல் பொருளாதார ரீதியிலும் பாதகமானதாக இருந்தது. அதன் பிரகாரம் 2016 ஏப்ரல் மாதம் நடைபெற்ற அமைச்சின் கொள்கை ரீதியான கொள்கைக் கூட்டத்தின் போது முழு அரசாங்கத் துறைகளுக்காகவும் சம்பள முகாமைத்துவத்திற்கு பொருத்தமான இன்னுமொரு மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் ITMIS முறைமையில் வரையறுக்கப்பட்ட சம்பள முகாமைத்துவ செயற்பாடுகளை மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட e-Payroll சம்பள முகாமைத்துவ முறைமை தற்போது நிதி அமைச்சிலும், திறைசேரிகள் திணைக்களத்திலும் பரிசோதனை ஓட்டமாக அமுல்படுத்தப்படுகின்றது. இதன் வெற்றிகரமான தன்மையின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	பொருளாதார ரீதியிலும், செயற்திறன் தொடர்பாகவும் விஷேட கவனம் செலுத்தி மொத்த அரசாங்கத் துறைகளுக்காகவும் சம்பளம் முகாமைத்துவம் முறைமையொன்றை அமுல்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2023 திசம்பர் 27 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டின் ஆரம்ப பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் தளபாடப் பொருட்கள் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களை கைப்பற்றுவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 6.5 மில்லியனாக காண் பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஆரம்ப பெறு கைத் திட்டத்தல் குறிப்பிடப்படாத CIGAS பிரிவிற்கு புதிய Server அலகொன்று மற்றும் SQL data base ஒன்றும் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 9,717,960 மற்றும் சம்பள மென்பொருள் பிரிவிற்காக 20 லெப்டொப் கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 5,003,200 தொகை யும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 14,721,160 முன் அங்கீகாரம் இன்றி செலவிடப்பட்டிருந்தது. பின்னர் மீளாய் வாண்டின் இறுதியின் போது 2025 சனவரி 06 ஆம் திகதி திருத்தப்பட்ட பெறுகைத் திட்டத்தின் போது அது ரூபா 19.34 மில்லியனாக 198 சதவீதத்தால் அதிகரித்து திருத்தப்பட் டிருந்தது.	ஆண்டின் போது தொழில்நுட்ப உபகரணங்களின் விலைகள் மதிப்பீடு செய்யப்பட்ட அளவினை விட அதிகரித்ததன் காரணமாகவும், உரிய ஆண்டில் அந்த பணிகள் அத்தியவசியமாக மேற்கொள்ள வேண்டியிருந்தமையாலும், மேலதிக நிதி ஏற்பாடு வழங்குதல் மற்றும் CIGAS மற்றும் GPS போன்று ஏனைய பயிற்சியளிப்பதற்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான லெப்டொப் கணனிகள் மற்றும் தேவையான ஏனைய தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்யும் தேவை உருவாகி இருந்தது. இதற்காக செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டநிதி ஏற்பாடு, குறித்துரைத் அங்கீகாரம் கிடைக்காமையின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் ஆண்டில் உரிய பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமை யின் அடிப்படையில் சேமிப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டிருந்தமையும் 2102 செலவின விடயத்திற்காக மேலதிகமாக ஒதுக்கீடுகள் பெற்றுக்கொள்வற்குப் பதிலாக 2024 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாட்டில் சேமிப்பு இருக்கு மென எதிர்பார்க்கக்கூடிய செலவின விடயங்களில் இருந்து செலவினங்களில் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் நிதி ஏற்பாடுகள் மாற்றப்பட்டு முகாமைத்துவம் செய்தல் பொருளாதார ரீதியில் மிகவும் பயனுள்ளதாக இருந்தமையால் அவ்வாறு நடவடிக்கை எடுத்து தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்களை உள்ளடக்கி திருத்தப்பட்ட பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.	சகல தேவைகளையும் கவனத்திற்கொண்டு முன்னுரிமையினை இனங்கண்டு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

4.3 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் (8493) காலப் பகுப்பாய்வின் பிரகாரம் அரசாங்கத்தின் அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள், உள்ளக இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள், மாகாண சபையின் நிறுவனங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள், மரணமடைந்த உத்தியோகத்தர்கள், ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள், வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள், சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள், இரண்டாம் அடிப்படை யில் இடமாற்றம் மற்றும் உள்ளக இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத் தர்கள், வெளிநாடு சென்ற / உள்நாட்டு விடுமுறை பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய வகைகளின் கீழ் ஆன உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 108 மில்லியனாக இருந்ததுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 232 மில்லியன் ஆக காணப்பட்டது.	ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் பீ கணக்கு அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அறவிடுவதற்குள்ள சகல மீதிகளும் பகுப்பாய்வு செய்யப்படுவதுடன் தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணம் மற்றும் காணப்படுகின்ற சுற்றறிக்கை ஏற்பாடுகளைப் பின்பற்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. காலாண்டு ரீதியில் அந்த நிறுவனங்களின் செயல் முன்னேற்றம் எங்களால் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் கடன் மீதிகளின் அறவீடுகளின் செயல் முன்னேற்றத்தைப் பரீட்சித்து தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்ப டுகின்றது.	அறவிட வேண்டிய முற்பண மீதிகளை தீர்த்து வைப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்து முறையை அபிவிருத்தி செய்தல் வேண்டும்.
(ஆ)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங் கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மத்திய அரசு, அரசாங்க ஊழியர்களின் முற்பண மீதி ரூபா 32,268 மில்லியனாக இருந்த போதிலும் கணக்காய்விற்கு அரச கணக்குகள் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 31,370 மில்லியனாக காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 898 மில்லியன் வேறு பாடு அவதானிக்கப்பட்டது.	அமைச்சு / திணைக்களத்தால் அனுப்பப்பட்ட முற்பண பீ கணக்குளில் தனித்தனியான மீதிகள் மற்றும் திறைசேரி மீதிகளுக்கிடையே காணப்படுகின்ற வேறுபாடுகளைத் தீர்த்துவைப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறும் உரிய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	மேற்படி

5. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் காணப்பட்ட 41 வெற்றிடங்க ளுக்கிடையே கிரேஷ்ட நிலையில் 12 பதவிகளும், மூன்றாம் நிலையில் 02 பதவிகளும், இரண்டாம் நிலையில் 23 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலையில் 04 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டது. உரிய பதவிகளை நிரப்புவதற்கோ அல்லது பதவியணியினர் பகுப்பாய்வொன்றை மேற் கொண்டு தேவையற்ற பதவிகளை நீக்குவதற்கோ மீளாய்வாண்டின் போதும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவல்லை.	தற்போது இந்த வெற்றிடமான பதவிகளில் மூன்றாம் நிலையில் 01 பதவியும் மற்றும் இரண்டாம் நிலையில் 02 பதவிகளுக்காகவும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சிரேஷ்ட நிலையில் 09 பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு உரிய வெற்றிட கடிதம் நிதி அமைச்சின் செயலாளர் மூலம் அரச நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் வெற்றிடமாகக் காணப்படுகின்ற பதவிகளுக்காக நியமிப்பதற்கு மிகையான உத்தியோகத்தர்கள் இந்த சந்தர்ப் பத்தில் காணப்படாதிருந்தமையும் எதிர்காலத்தில் அது தொடர்பாக கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் அரச நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.	வெற்றிடயங்களை நிரப்புவதற்கோ அல்லது பதவியணியினரை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.